### முஸ்லிம் வாக்குகள் என்பதும்

# முஸ்லிம்லீக் வாக்குகள் என்பதும் வேறு என்பதுகூட தெரியாமல் பேசுவதா?

## பேராசிரியர் காதர்மொய்தீனுக்கு – மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் மு.தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம்!

**சிதம்பரம், மே 27-**

**“முஸ்லிம் வாக்குகள் என்பதும் முஸ்லிம்லீக் வாக்குகள் என்பதும் வேறு என்பதுகூட தெரியாமல் பேசுவதா?” என்று மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் மு.தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. பேராசிரியர் காதர்மொய்தீனுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தமீமுன் அன்சாரி நேற்று செய்தியாளர்களுக்கு அளிதித பேட்டி வருமாறு:-

**செய்தியாளர்:** *தமிழ்நாட்டில் ‘பவர் கட்’ அதிகமாக இருக்கிறதே?*

**தமீமுன் அன்சாரி:** துறை சார்ந்த அமைச்சகம் கூடுதலாக கவனம் எடுத்து, எதனால் பவர் கட் ஆகிறது என்பதை ஆராய்ந்து சரி செய்யவேண்டும்.

இதே போன்ற தவறுகள் போன முறை நடக்கும்போது எவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்தீர்கள்? உங்களுக்கு வந்தால் இரத்தம், மற்றவர்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா? உடனடியாக இதை நீங்கள் சரி செய்ய வேண்டும். இதே தவறுகளை கடந்த ஆட்சியினரைக் கடுமையாக நீங்கள் விமர்சனம் செய்தீர்கள். சோசியல் மீடியாவில் கிண்டல் செய்தீர்கள். அந்தத் துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி அவர்களை, ‘அணில்’ என்று சொல்லி நக்கல் செய்தீர்களா, இல்லையா?

### ஆறு சிலிண்டர்கள் எப்போது தரப் போகிறீர்கள்!

இப்பொழுது அதே போன்ற பிழைகள், அதே மாதத்தில் தானே வருகிறது. இப்பொழுது இதற்கு என்ன விளக்கம் கொடுக்கப் போறீங்க? பெண்களுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மகளிர் உரிமைத் தொகையாக ரூ.2500 கொடுப்போம் என்று சொன்னீர்கள். ஏன் நீங்கள் கொடுக்கவில்லை. தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்ட 1000 ரூபாயைத் தானே கொடுக்குறீர்கள். அந்த 1000 ரூபாயை நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதிகப்படுத்தித் தருவோம் என்று கொடுத்த வாக்குறுதியை ஏன் உங்களால் செயல்படுத்த முடியவில்லை. நடைமுறைக்கு ஒத்துவராத வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள், இப்பொழுதாவது ஒப்புக் கொள்கிறீர்களா? ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்கள் கொடுப்போம் என்று சொன்னீர்களே, எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள்?

சி.பி.ஐ., சி.பி.எம்.ல. வி.சி.க. இந்தக் கட்சிகள் எல்லாம் வந்து, குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலும், பா.ஜ.க. வினுடைய கரம் ஓங்கி விடக்கூடாது என்ற அடிப்படையிலும் தான் நாங்கள் ஆதரவு கொடுத்தோம் என்று சொன்னார்கள். சி.பி.ஐ., சி.பி.எம். இரண்டு கட்சிகளும் வெளியிலிருந்து ஆதரவு என்று சொல்லி, ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். அது அந்தக் கட்சிகளுடைய நிலைப்பாடு. வி.சி.க.வும், ஐ.யு.எம்.எல். கட்சியும் ஆட்சியில் பங்கெடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது நாம் என்ன சுட்டிக்காட்டுகிறோம் என்று சொன்னால், ஒவ்வொரு கட்சிக்கும், என்ன முடிவெடுக்க வேண்டும் என்கிற அதிகாரம் எல்லாம் அந்தக் கட்சிகளுடைய தலைமை நிர்வாகத்துக்கு உண்டு. அந்தத் தலைமை நிர்வாகிகள் எடுத்திருக்கிறார்கள்.

நாம் என்ன சொல்கிறோம் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உழைப்பால், வியர்வையால் இந்த வெற்றிகள் சாத்தியமானது என்பதை நாம் எல்லோருமே ஒப்புக்கொள்ள வேண்டும். இதே கூட்டணியில்தான் தொடர்வோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். இன்னொரு பக்கம், ஆட்சியிலேயும் பங்கெடுத்து இருக்கிறீர்கள். இது எதிர்காலத்தில், இது எத்தகைய நகர்வை நோக்கிச் செல்லும் என்று நம்மால் உறுதியாகக் கூற முடியவில்லை. எது எப்படி இருந்தாலும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த அய்ந்து ஆண்டு காலத்தில் எவ்வளவு சிறப்பான ஆட்சியை நடத்தியது என்பது எல்லோருக்குமே தெரியும். அதை யாருமே, அவ்வளவு எளிதில் மறந்து போய்விட முடியாது. இப்போது நீங்கள் அணி மாறி, ஆட்சியில் பங்கெடுத்திருக்கிறீர்கள். எங்களுடைய திட்டங்கள் எல்லாவற்றையும் நீங்கள் முடங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை இருக்கிறது.

## லாட்டரி சீட்டை மீண்டும் கொண்டுவந்தால்.....

### தளபதி ஸ்டாலினின் சிறப்பான ஆட்சி!

மிகச் சிறப்பான ஓர் ஆட்சியை தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்கள் கொடுத்தார்கள். அந்தத் திட்டங்கள் முடங்காமல் கொண்டு செல்வதற்கான பணிகளை, நீங்கள் எல்லாம் முன்னெடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நீண்ட காலமாக தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்த கட்சி. தி.மு.க.வும் பாரதிய ஜனதா கட்சியும் கூட்டணி இருந்த காலகட்டத்தில், அவர்கள் அந்தக் கூட்டணியில் இல்லை. அ.தி.மு.க. கூட்டணிக்குப் போனார்கள். அதற்குப் பிறகு, தி.மு.க. கூட்டணிக்கு வந்தவர்களை, தி.மு.க. எப்போதுமே பெரிய அளவில் அவர்களை மதித்திருக்கிறது. கூட்டணிப் பேச்சு வார்த்தையைத் தொடங்கும்போது, முதல் கட்சியாக அவர்களுக்குதான் அழைப்பு கொடுப்பார்கள். கூட்டணியில் ஒரு மூத்த தலைவராகத்தான் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களை, தி.மு.க.வினுடைய தலைவர் அவர்கள் மதித்து வந்தார். எப்படி அய்யா நல்லகண்ணுவை மதித்தார்களோ, எப்படி அய்யா சங்கரய்யாவை மதித்தார்களோ, எப்படி பழ.நெடுமாறன் அவர்களை மதிக்கிறார்களோ, அப்படித்தான் அவர்களை மதித்தார்கள். ‘தகைசால் தமிழர்’ என்ற உயரிய விருதையும் கொடுத்து சிறப்பித்தார்கள்.



இந்நிலையில், பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள், தங்கள் கட்சியினுடைய முடிவை செயல்படுத்தி இருக்கிறார். அந்தக் கட்சியினுடைய விருப்பம்; நாங்கள் அதை குறை சொல்லவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு கட்சிக்கும் முடிவெடுக்கக் கூடிய அதிகாரம் உண்டு. அதை, நாம் மட்டுமல்ல, கூட்டணியினுடைய தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கூட சொல்லிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சிக்கும், முடிவெடுக்கக்கூடிய சுதந்திரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது என்று சொல்லிருக்கிறார்கள்.

ஆனால், நாம் என்ன சொல்கிறோம் என்றால், நீங்கள் பிரியும் போது, நண்பர்களாகப் பிரிந்து செல்லவேண்டும். இத்தனை ஆண்டு காலம் உன்னதமான இடத்தில், நம்மை வைத்திருந்தார்கள். நல்ல நட்பில் இருந்தோம், தோழமையில் இருந்தோம். நாம் வேறு ஒரு அரசியல் முடிவுகளை மேற்கொள்ளும் போது, வேறு ஓர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும்போது, சங்கடம் இல்லாமல், காயம் இல்லாமல் பிரிந்து செல்லவேண்டும் என்கிற அடிப்படை பண்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் அதை பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களுடைய ஒரு தனியார் தொலைக்காட்சி பேட்டி, உடைத்திருப்பதாக நான் கருதுகிறேன். மிகவும் வருந்துகிறேன்.

### முஸ்லிம் வாக்குகளும் தி.மு.க. வெற்றியும்!

பேராசிரியர் காதர் மொகிதீன் போன்ற பெரிய மனிதர்கள், மூத்த அரசியலாளர்கள் இப்படி எல்லாம் பேசலாமா? என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. அடுத்தாக, முஸ்லிம்களுடைய வாக்குகளால்தான் தி.மு.க. வெற்றி பெற்றது என்று சொன்னார்கள். நாங்கள் ஒரு விஷயத்தைச் சொல்கிறோம். முஸ்லிம் லீக்கினுடைய வாக்குகள் என்பது வேறு; முஸ்லிம்களுடைய வாக்குகள் என்பது வேறு. இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

முஸ்லிம்கள் ஏறத்தாழ பரவலாக, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டில் எடுத்துக்கொண்டால், 70% முதல் 80 % வாக்குகளை திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய தலைமையிலான கூட்டணிக்குத்தான் செலுத்தி இருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் அது 10% மாக எதிர்க்கட்சிக்குப் போயிருக்கலாம். பிற கட்சிகளுக்கு 20 % அளவில் போயிருக்கலாம். சில இடங்களில் 30 % அளவில் கூட போயிருக்கலாம். ஆனால், 70%க்கும் அதிகமான வாக்குகள், அது அதிகபட்சமாக 80% வரை மொத்தமாக தி.மு.க.வுக்குதான் முஸ்லிம்கள் வாக்களித்திருக்கிறார்கள். இந்த வாக்குகள் முஸ்லிம் லீக்கினுடைய வாக்குகள் அல்ல. அதாவது, கடந்த 15 ஆண்டுகளாக மோடி அவர்கள், பிரதமராக வந்த பிறகு, அவருடைய அரசியல் தீவிரம் பெற்ற பிறகு, இந்தியா முழுக்க இருக்கக்கூடிய முஸ்லிம்கள், ஒவ்வொரு மாநிலத்திலும் தங்களுடைய அரசியல் நலனுக்கு எது உகந்ததோ, அதற்கேற்ப முடிவெடுத்து வருகிறார்கள்.

உத்தரப் பிரதேசம் என்றால், அகிலேஷ் யாதவுக்கு ஓட்டு போடுவார்கள், சமாஜ்வாதி கட்சிக்கு. பீகார் மாநிலம் என்றால், ராஷ்ட்ரிய ஜனதா தள், தேஜஸ்வி யாதவுக்கு ஓட்டு போடுவார்கள். மேற்கு வங்காளம் என்று சொன்னால், திரிணாமுல் காங்கிரஸ், மம்தா பானர்ஜிக்கு ஓட்டு போடுவார்கள். அதே மாதிரிதான் தமிழ்நாட்டில் சி.ஐ.ஏ. போராட்டம் வந்ததற்குப் பிறகு அல்ல, அதற்கு முன்பிருந்தே நல்ல நட்பு இருக்கிறது. குறிப்பாக சி.ஐ.ஏ. போராட்டம் வந்ததற்குப் பிறகு, தி.மு.க.தான் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு.

தமிழ்நாட்டினுடைய சமூக ஒற்றுமைக்கு தி.மு.க.வால்தான் பாதுகாப்புத் தர முடியும் என்ற நம்பிக்கை சிறுபான்மை முஸ்லிம்களுக்கு இருக்கின்ற காரணத்தினால்தான், 70 % வரையில் அதிகமான வாக்குகளை இந்த முறையும் போட்டு இருக்காங்க. அது பல இடங்களில் 90 % வரையும் போட்டு இருக்கிறார்கள். சில இடங்களில் 95 % வரையும் போட்டு இருக்கிறார்கள். அதற்கு முஸ்லிம் லீக் காரணம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### கூட்டணியை காயப்படுத்தாதீர்!

அடுத்ததாக பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள், ஒரு மூத்த அரசியலாளர். அதுவும் கலைஞர் அவர்களுடைய குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர். அவர் என்ன சொல்கிறார் என்றால், எங்களுடைய முடிவை யாரும் விமர்சிக்கக் கூடாது. அப்படி விமர்சித்தால், நாங்களும் அதே மாதிரி விமர்சிப்போம் என்று சொல்லியிருப்பது, ஒரு பெரிய மனிதருக்கான அழகாக எனக்குத் தெரியவில்லை. அடுத்தது, அவருடைய பேட்டியில், “எங்களை விமர்சிப்பது முட்டாள்தனம், போக்கிரித்தனம்” என்பது போன்ற வார்த்தைகளை அவர் பயன்படுத்தி இருக்கிறார். இது, ஒரு கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் உருவாக்கிய முஸ்லிம் லீக்கினுடைய தலைவர்கள் பேசக்கூடிய பேச்சா? என்ற ஒரு கேள்வியை வைக்கின்றோம்.

மீண்டும் தெளிவாகச் சொல்கிறோம். நீங்கள் எந்த அரசியல் முடிவு வேண்டுமென்றாலும் எடுங்கள். அது உங்கள் விருப்பம். அதற்காக இந்தக் கூட்டணியைக் காயப்படுத்திவிட்டுச் செல்லாதீர்கள். கடந்த காலத்தில் இருந்த நட்பையும், அவர்கள் தந்த மரியாதையையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் புரட்சி ஒன்று வருகிறது; மாற்றம் ஒன்று வருகிறது என்றால், அது ஆக்கப்பூர்வமான அடிப்படையில் வர வேண்டும்.

## காங்கிரசாருக்கு காமராஜர் கற்றுக் கொடுத்த அரசியல் இதுதானா?

சோசியல் மீடியாவை மட்டுமே நம்பி, எந்த ஒரு மாற்றமும் வந்துவிடும் என்று சொல்லி, நம்புவதை முழுமையாக ஏற்கவும் முடியவில்லை; நிராகரிக்கவும் முடியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஊழலுக்கு எதிரான செயல் திட்டங்கள், விரைவான அரசு நடவடிக்கைகள், வேலை வாய்ப்புப் பிரச்சினைகளை தீர்த்தல், பொருளாதார முன்னேற்றம் – இப்படிப்பட்ட குறிக்கோள்களை மய்யமாக வைத்து ஒரு புரட்சி ஏற்பட்டது என்றால், அந்தப் புரட்சியை நாம் வரவேற்கலாம்.

ஆனால், அரசியல் விவரம் புரியாதவர்கள் எல்லாம் சோசியல் மீடியாவில் எழுதி, அதன் மூலமாக ஒரு மாற்றத்தை உருவாக்கப் போகிறோம் என்பது எந்த அளவுக்கு விடையைத் தரும்.

நான் கேட்கிறேன், மக்களிடம் புரட்சிகரமான சிந்தனை ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா? நான் வெளிப்படையாகச் சொல்கிறேன், கடந்த தேர்தலில் என்ன நடந்தது? எங்களுடைய பேரப்பிள்ளைகள் சொல்லிட்டார்கள், எங்கள் பிள்ளைகள் சொல்லிட்டார்கள்; அதனால், நாங்கள் ஒரு ஓட்டுப் போட்டோம்; இப்படி ஓர் ஆட்சியே மாறும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்கிறார்கள்.

இன்னொரு தரப்பைப் பார்த்து மக்கள் கேட்கிறார்கள், “ஏம்பா உதய சூரியன் காரர்களிடமும் நீங்கள் பணத்தை வாங்கி விட்டீர்கள், ஓட்டுக்கு; இரட்டை இலைக்காரங்களிடமும் பணத்தை வாங்கி விட்டீர்கள். இரண்டு பேரிடமும் பணத்தை வாங்கிக் கொண்டு. மூன்றாவது ஆளுக்கு ஓட்டுப் போட்டதற்குப் பெயர் என்னப்பா? இது என்ன நேர்மை? என்று கேட்கிறார்கள். இந்த விவாதங்கள் எல்லாம் விவாதிக்கப்பட வேண்டுமா, இல்லையா? அப்படியென்றால், புரட்சி என்பது 100 சதவிகிதம் நியாயத்தின் அடிப்படையிலும், ஒழுக்கத்தின் அடிப்படையிலும் அமையப்பட வேண்டும். மாற்றம் என்பதும், ஜனநாயக தன்மையோடு நகர்த்தப்பட வேண்டும். ஜனநாயக தன்மையும், ஒழுக்கமும் இல்லாத எந்த மாற்றமும், புரட்சியும் நீண்ட காலம் தாக்குப் பிடிக்காது. அதனால், இந்தக் காக்ரோச் ஜனதா பார்ட்டி இவை எல்லாமே ஒரு நாள் செய்திகளாக, ஒரு வார செய்திகளாக இருக்கும். நீண்ட கால மாற்றத்துக்கு இவையெல்லாம் உதவாது என்று நான் நினைக்கிறேன்.

### காமராஜர் கற்றுத் தந்த அரசியல் இதுதானா?

**செய்தியாளர்:** *10 ஆண்டு காலமாக தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ் கட்சி, இப்போது தி.மு.க.வை கடுமையாக விமர்சனம் செய்கிறதே?*

**தமீமுன் அன்சாரி:** சோதனையான காலகட்டங்களில் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்குத் துணையாக நின்றது திராவிட முன்னேற்றக் கழகம். அதை காங்கிரஸ்காரர்கள் யாராவது மறுப்பார்களா? அண்ணன் ராகுல் காந்தி மறுப்பாரா? அன்னை சோனியா காந்தி மறுப்பார்களா? இங்கே இருக்கக்கூடிய அய்யா ப.சிதம்பரம் போன்ற மூத்த அரசியல் தலைவர்கள் மறுப்பார்களா? உங்களுக்கு உண்மையிலேயே தி.மு.க.வின் மீது கசப்பு இருந்திருந்தால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே உறவை முறித்துக் கொண்டு போயிருக்க வேண்டும். அல்லது இந்தச் சட்டமன்றத் தேர்தலில் உங்கள் உறவை முறித்துக் கொண்டு போயிருக்க வேண்டும். இப்போது நீங்கள் நடந்து கொண்ட அரசியல் அணுகுமுறைகள் மக்களால் ரசிக்கப்படுகிறதா?

சட்டமன்றத் தேர்தலில், 28 சீட்டுகளைக் கேட்டுப் பெற்றீர்கள். ஒரு மாநிலங்களவைச் சீட்டைக் கேட்டு பெற்றீர்கள். வெற்றி பெற்ற பிறகு, தங்களுக்காகத் தேர்தலில் செலவு செய்த, தங்களுக்காக 28 தொகுதிகளிலும் கடுமையாகப் பாடுபட்ட தி.மு.க.வினுடைய தொண்டர்களைத் திருப்தி படுத்தும் விதமாக, அந்தத் தலைவரிடம் ஒரு வார்த்தை நன்றியைச் சொல்லிட்டு, ‘ஒரு புதிய அரசியல் சூழல் உருவாகி இருக்கிறது. எங்கள் தொண்டர்கள் இப்படி விரும்புகிறார்கள். எங்கள் கட்சித் தலைவர்கள் இப்படி விரும்புகிறார்கள். நாங்கள் அந்தக் கூட்டணிக்குப் போகிறோம் என்பதை பண்பாடாகச் சொல்லிட்டு போயிருந்தீர்கள் என்றால், நாங்களே உங்களுக்குச் சால்வை போர்த்தி வாழ்த்தி இருப்போம். சரி, பிரியும் போது கூட, நண்பர்களாகப் போகிறார்கள் என்று.

ஆனால், எப்பொழுது, இப்படிப்பட்ட ஒரு முடிவு வரும் என்று காத்திருந்தது போலவும், இத்தனை ஆண்டுகள் வேண்டா வெறுப்பாக இருந்து நடித்துக் கொண்டிருந்தது போலவும், உடனடியாக சத்தியமூர்த்தி பவனில், ராகுல் காந்தி அவர்களுடைய படத்தையும், விஜயினுடைய படத்தையும் வைத்து நீங்கள் ஆட்டம் போட்டீங்களே, இதெல்லாம் நல்ல அரசியலா? இதுதான் காமராஜர் கற்றுக் கொடுத்த அரசியலா? இதுதான் கக்கன் கற்றுக் கொடுத்த அரசியலா? இப்படிப்பட்ட ஒரு பண்பாட்டு வீழ்ச்சிக்கு நீங்கள் போய்விட்டீர்கள். இப்பொழுது நீங்கள் தி.மு.க.வை விமர்சிக்கிறீர்கள் என்று சொன்னால், அது எந்தவிதத்தில் நியாயமாக இருக்கும்?

இத்தனை ஆண்டு காலம் தி.மு.க.வைச் சுற்றியே வந்தீர்கள்; அறிவாலயத்தை சுற்றியே வந்தீர்கள்; தி.மு.க.வினுடைய நிர்வாகிகளோடு கொஞ்சி குலாவினீர்கள். இப்படி எல்லாம் செய்துவிட்டு, ஒரே மாதத்தில் நீங்கள் மாற்றிப் பேசுகிறீர்கள் என்றால், இது என்ன அரசியல் அறம்? என்று எனக்குத் தெரியவில்லை.

சத்தியமூர்த்தி பவனில் இருக்கக்கூடிய பல தலைவர்களுடைய படங்களைப் பார்க்கிறோம். பல தலைவர்களுடைய உன்னதமான கருத்துகளைக் கேட்டு பெற்ற காங்கிரஸ்காரர்கள்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்களா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. சங்கடமாகவும் இருக்கிறது. நாளைக்கு முகம் பார்க்க வேண்டும். அரசியலில் இதே நிலை தொடரும் என்று சொல்ல முடியாது. நீங்கள் நிச்சயமாக என்றாவது ஒரு நாள் அறிவாலயத்தின் பக்கம் திரும்பித்தான் பார்ப்பீர்கள். அப்பொழுது திரும்பிப் பார்க்கும்போது, தி.மு.க. தலைவருடைய முகத்தைப் பார்க்க வேண்டும், சந்திக்க வேண்டும் என்பதை மனதில் வைத்துப் பேசுங்கள்.

### டெல்லி தீய சக்திகளின் விருப்பம்!

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளை அழிக்க வேண்டும் என்பது டெல்லியில் இருக்கக்கூடிய சில தீய சக்திகளுடைய விருப்பம், கனவு.

“கழகங்கள் இல்லாத தமிழ்நாடு; கவலைகள் இல்லாத தமிழ்நாடு” என்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதற்கு முதல் பலி அண்ணா தி.மு.க.

அண்ணா தி.மு.க.வை, மரியாதைக்குரிய மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மா அவர்கள் மறைந்த பிறகு, அந்தக் கட்சியை எப்படி எல்லாம் உடைத்து நொறுக்கியது யார் என்பது உங்களுக்குத் தெரியும். பல தலைவர்களை வெளியேற்றியது யார் என்றும் உங்களுக்குத் தெரியும். வெளியேற்றிய தலைவர்களை அழைத்து வைத்து, பஞ்சாயத்து செய்தவர்கள் யார்? என்பதும் தெரியும். இன்றைக்கு அண்ணா தி.மு.க.வை பிளவுப்படுத்தினார்கள். இப்பொழுது என்ன செய்கிறார்கள் தெரியுமா? தி.மு.க.வை தனிமைப்படுத்த நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களிடம் நாங்கள் சொல்லக்கூடிய ஒரு முக்கியமான செய்தி, தமிழ்நாட்டு அரசியலில் தி.மு.க. தனிமைப்படுவதோ, அண்ணா தி.மு.க. பிளவுபடுவதோ நல்லதல்ல. சண்டையோ, சச்சரவோ தமிழ்நாட்டை, ஒன்று தி.மு.க. ஆள வேண்டும் அல்லது அண்ணா தி.மு.க. ஆள வேண்டும். இந்த இரண்டு திராவிடக் கட்சிகளுக்குத் தான் அனுபவங்கள் இருக்கின்றன.

தி.மு.க.. கொள்கைகளை அழுத்தமாகப் பேசும், ஆழமாக பேசும். அண்ணா தி.மு.க. அந்த அளவுக்கு அழுத்தமாக, ஆழமாகப் பேசாவிட்டாலும், அதைச் சார்ந்து செல்லும். ஆனால் இரண்டு திராவிடக் கட்சிகளையும் ஒழிக்க வேண்டும் என்பதில், சில தீய சக்திகள் ரொம்ப விருப்பத்தோடு இருக்கிறார்கள். அதற்கு நாம் யாரும் இடம் கொடுத்து விடக்கூடாது.

இன்றைக்குத் தி.மு.க.வை தனிமைப்படுத்த நினைக்கிறார்கள். எழுதி வைத்துக் கொள்ளுங்கள், இந்த நேரத்தில் தி.மு.க.வைப் பாதுகாப்பது, ஜனநாயக சக்திகளுடைய கடமை என்று நினைக்கிறோம். இந்த நெருக்கடியான நேரத்தில், எங்களுடைய மனிதநேய ஜனநாயகக் கட்சி, தி.மு.க.வோடு தான் இருக்கிறது. தி.மு.க. மீண்டும் பலம் பெறுகின்ற வரை, தி.மு.க.வுக்கு ஆதரவாகத்தான் நாங்கள் இருப்போம். ஏனென்று சொன்னால், தி.மு.க. ஒழிக்க வேண்டும் என்று சில பேர் நினைக்கிறார்கள். இந்த நேரத்தில், தி.மு.க. தமிழ்நாட்டினுடைய நலனுக்காகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லி, அதை நாங்கள் விரும்புகிறோம். அதனால், தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசியலைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, சில முடிவுகள் எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

### ஜனநாயக சக்திகள் பிளவு படக்கூடாது!

**செய்தியாளர்:** *தலைமை தடுமாறுகிறது. அதனால், வி.சி.க.வில் இருந்து விலகுகிறேன் என்று பனையூர் பாபு விலகியிருக்கிறாரே, அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?*

**தமீமுன் அன்சாரி:** விடுதலைச் சிறுத்தைகள் எங்களுடைய தோழமையில், தேர்தல் வரை இருந்த இயக்கம். இப்போது கூட அவர்கள் வேறு முடிவு எடுத்தாலும், நாங்கள் தி.மு.க.வோடு நட்பு தொடரும் என்று சொல்லி இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களைப் போல ஒரு கடுமையான, பிழையான அணுகுமுறைகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை. இப்போதும் சி.பி.ஐ., சி.பி.எம்., வி.சி.க., ஐ.யூ.எம்.எல். எல்லாவற்றையும் நாங்கள் நட்பு சக்திகளாகத்தான் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் ஜனநாயக சக்திகள் பிளவுபடுவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் என்ன சொன்னோம்? அண்ணா தி.மு.க. பிளவுபடுவதை விரும்பவில்லை என்று சொன்னோம். அதேபோலத்தான் வி.சி.க. பிளவுபடுவதையோ, அங்கே சச்சரவுகள் உருவாவதை நாங்கள் விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால், பாட்டாளி மக்கள் கட்சி பிளவுபடுவதையே நாங்கள் விரும்பவில்லை. அது வேறு அரசியல் அணியில் இருந்தாலும், அது ஒரு சமூக நீதிக் கட்சி. ஜாதிவாரி கணக்கெடுப்புக்காக போராடக்கூடிய கட்சி. பூரண மதுவிலக்குக்காகப் போராடக்கூடிய கட்சி, தமிழ்நாட்டினுடைய, தமிழர்களுடைய நலனுக்காக போராடிய கட்சி. நாங்கள் வேறு அணியில் இருந்தாலும், பா.ம.க. பிளவு படக் கூடாது என்று நாங்கள் நினைத்தோம். அதே மாதிரிதான் இப்பொழுது வி.சி.க.வும் பிளவு படக் கூடாது என்று நினைக்கிறோம். அண்ணா தி.மு.க.வும் பிளவு படக் கூடாது என்று நினைக்கிறோம்.

ஏனென்றால், இவர்கள் எல்லாருமே, நாங்கள் அரசியலில் வெவ்வேறு அணிகளாக இருக்கலாம். வெவ்வேறு நிலைகளைக் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், இவர்கள் எல்லாம் ஜனநாயகச் சக்திகள். தமிழ்நாட்டினுடைய வாழ்வுரிமைகளை, தமிழ்நாட்டினுடைய நலனை விட்டுக் கொடுக்காத கட்சிகள். இவர்கள் எல்லாம் பலகீனப்பட்டார்கள் என்றால், டில்லியில் இருக்கக்கூடிய தீய சக்திகள் பலம் பெற்று விடுவார்கள். அதனால்தான் நாங்கள் சொல்றோம், இங்கே நடப்பது அண்ணன் – தம்பி பிரச்சனை. பாட்டாளி மக்கள் கட்சி பிரச்சனையாக இருக்கட்டும்; விசிக பிரச்சனையாக இருக்கட்டும், தி.மு.க. பிரச்சனையாக இருக்கட்டும், அண்ணா தி.மு.க. பிரச்சனையாக இருக்கட்டும் இவையெல்லாம் அண்ணன் – தம்பி பிரச்சனை. நமக்குள்ள பேசி சரி செய்து கொள்வோம். ஆனால், இந்தப் பிளவுகளால், தமிழ்நாட்டினுடைய எதிர்கால நலன் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம்.

தி.மு.க.வும் – அண்ணா தி.மு.க.வும் அரசியல் பங்காளிகள். ஏன், அண்ணாவுடைய தம்பிகள் ஒன்றாக அமர்ந்து பேசக்கூடாதா? பெரியாருடைய பேரப்பிள்ளைகள் கலந்துரையாடக் கூடாதா? தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்கிற நலனுக்காக ஒரு சாதாரண பேச்சு வார்த்தையைக் கூட நடத்த கூடாதா? அவர்கள் நடத்தினார்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி நடத்தினால், என்ன தவறு என்று நான் கேட்கிறேன்.

### லாட்டரியை எதிர்த்து போராட்டம் நடத்துவோம்!

**செய்தியாளர்:** *லாட்டரி சீட்டு மாஃபியா தான் இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது. ஆதவ் அர்ஜுனாவுக்கு, லாட்டரி சீட்டு தொழில். அதே மாதிரி லாட்டரி சீட்டு தொழில் நடத்தும் மார்ட்டினுடைய மனைவி அண்ணா தி.மு.க. சார்பாக வெற்றி பெற்றிருக்கிறார். மீண்டும் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டு வந்தால், உங்களுடைய நிலைபாடு என்னவாக இருக்கும்?*

**தமீமுன் அன்சாரி:** அவர்கள் லாட்டரி சீட்டு நடத்துகிறார்களா? கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்களா? மணல் மாபியாவாக இருக்கிறார்களா? என்பது எங்களுக்குத் தேவையில்லை. அதை அரசு கவனிக்க வேண்டும். ஆனால், ஆட்சி அதிகாரத்தின் பெயரால், மீண்டும் லாட்டரி சீட்டு தமிழ்நாட்டுக்கு வருமேயானால், அந்த நகலை எரிக்கும் போராட்டத்தை மனிதநேய ஜனநாயகக் கட்சி தொடங்கும். அனைத்து விதமான ஜன சக்திகளையும் அணி திரட்டி எங்களுடைய போராட்டத்தை நடத்துவோம்.

ஏழை, எளிய மக்கள் ஏற்கனவே டாஸ்மாக் கடைகளால் அழிந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் வந்து பேராசையைக் காட்டி, லாட்டரிக் கொண்டு வந்தால், உழைக்கும் மக்களுடைய பணம் எல்லாம் அந்த லாட்டரியை நம்பி சீரழியும். சில நபர்கள் வந்தால், பல மில்லியன் டாலர் சம்பாதிக்கலாம். ஆனால், பல லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கை சீரழிந்து போய்விடும். அதனால், லாட்டரி சீட்டைக் கொண்டு வரக்கூடிய எந்த முயற்சியில் ஈடுபட்டாலும், அதை நாங்கள் மிகக் கடுமையாக எதிர்ப்போம். ஜனநாயகச் சக்திகளை அணி திரட்டுவோம்.

எனவே, தமிழ்நாடு அரசு, அந்த தப்பான முடிவை சிந்திக்கவே கூடாது என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிமுன் அன்சாரி பேட்டியளித்தார்.